# விளம்பரம்™

VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 24 DECEMBER 15, 1999



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன்

RE/MAX Crossroads Rlty Inc. sales rep.

* இன்றைய சேவை- நாளைய வெற்றி



❊ சமுத்திரம் பொங்கி எழுவது எதனால்? (பக். 9)

❊ பதினாறு படங்களில் சிவாஜியுடனான உறவு? (பக். 7)

❊ GO LEAFS GO!! GO RAPTORS GO!! (பக். 6)

❊ சுவர் இருந்தால் சித்திரம் வரையலாம்? (பக்.4)

❊ நீண்ட தூர பிரயாணத் திதிட்டம் (பக். 12)

❊ நித்திரையின் போது மூளை விருத்தி அடையுமா (பக்.2)

❊ ஒழுக்கம் விழுப்பம் தருமா? (பக். 5)

❊ புதிய வருடத்தில் வட்டி வீதம் கூடுமா? (பக்.13)




விளம்பர வாசகர்கள்,
அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் நத்தார்
நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்வதில்
மகிழ்ச்சி அடைகிறோம்



Vlambaram Publication


இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

**சபோனாவிற்கு!**

*Sabona & Gift*

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

Markham / Eglinton

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)



## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

☞ பண்டைக் காலத்துச் சமயம், புதிய சமயம் ஆகிய அனைத்தையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். எல்லாப் பாங்குகளிலும் பரம பொருளை நான் போற்றுகிறேன். மசூதியில் முஸ்லீம் போன்று வணங்குகிறேன்; கிறிஸ்தவ ஆலயத்தில் கிறிஸ்தவன் போன்று தொழுவேன்; பௌத்த விஹாரத்தில் புத்தரிடத்திலும தர்மத்தினிடத்திலும் சரண் புகுவேன்; மனத்தகத்து இந்து போன்று பரம்பொருளை தியானிப்பேன்.

☞ கனமானது கீழே போகிறது. இலேசானது மேலே வருகிறது. அசையாப் பொருள பின்னணிக்குப் போகிறது; அசையும் பொருள முன் வந்து நிற்கிறது. சான்றோன நடுநிலையினின்று பிறழ்தலுமில்லை; அமைதியை இழப்பதுமில்லை.

☞ தற்பெருமை கொள்ளுவது சோம்பலுற்றிருப்பதை விடக் கொடியது.




## உன்னை அறிந்தால்

**"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க ஒரு மந்திரமில்லை"**

எப்போதோ படித்த ஞாபகம். படித்தது, பாடத்தில் சித்திபெறவா அல்லது வாழ்வில் கடைப்பிடிக்கவா? பாடத்தில் சித்தி பெறக்கூடிய விடயம் என்றால் அன்றுடன் மறந்து விட முடியும். இரண்டாவது சரியெனில் வாழ்வில் அதனைப் பயன்படுத்த வேண்டும். கல்வி என்பது ஒரு வகை அறிவு. நாம் கல்வி பயின்று அதனால் வரும் அறிவைக் கொண்டு வாழ்வை செம்மைப்படுத்திக் கொள்வதே கல்வியின் நோக்கம் வாழ்வில் எல்லா விசயங்களையும் கற்பித்து கொண்டு இருக்கமுடியாது. வாழ்வின் காலம் போதாது. அறிவைக்கொண்டு பல விசயங்களை அறிதல் வேண்டும். தாய் தந்தை, பிள்ளைகளைப் பெற்று சிறந்த முறையில் உருவாக்குவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். இவற்றில் மூன்று முக்கிய காரணங்களைக் கூறலாம். பிள்ளைகள் தங்களுக்குப் பிந்திய காலங்களில் பிள்ளைகளின் உதவிகிடைப்பது. பிள்ளைகள் தங்கள் வாழ்வில் சந்தோசமாக வாழ்வது. பெற்றோரின் ஆத்ம சந்தோசம் "பிறந்தபொழுதில் பெருதுவக்கதன்மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்". வாழ்வில் சிறப்பெய்திய பிள்ளைகள், பெற்றோரை அநாதை ஆச்சிரமத்தில், மொழிதெரியாத இடத்தில் தனிமைச் சிறையில் அவர்கள் பிந்திய காலத்தை கழிக்கச் செய்வது சரியா? தவறா? சிலதவறுகள் இருக்கின்றன. தவிர்க்கலாம். **சிந்திக்கவும்... செயல்படவும்**

**-நெற்றிக்கண்ணன்**


விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM



SINGAPORE PAGING

$25.00 +Taxes 200min/Month

$100. FREE PAGER Incl. 1YEAR SERVICE

Nokia 6188 with VIB

CANTEL

Bell Mobility


$50.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 200min இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 12.5 சதம் மட்டுமே

Mobile Massage, Call Forwarding, Call Display per second billing included.

மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234

**துரித பணமாற்றுச் சேவை**



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



**சிவாகம கிரியா பீடம்**

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)

திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr. , Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978



# அறிவும் ஆக்கமும் (47)

-விஜே குலத்துங்கம்

சென்ற இதழில் தூக்கத்தைப் பற்றிப் பார்த்தோம். இந்த இதழில் கனவுகளைப் பற்றிப் பார்ப்போம். கனவுகளுக்கு நீண்ட சரித்திரம் உண்டு. கிறிஸ்துவுக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்தியரின் ஆவணங்களில் கனவுகளையும் அவற்றின் பலன்களையும் பற்றி குறிப்பிட்டிருந்தது. கிரேக்க நாட்டில் முன்னைய காலத்தில் கனவு காண்பவர் கடவுளுடன் தொடர்பு கொண்டவர் எனக் கருதப்பட்டது. கனவுகள் கடவுளிடமிருந்து அனுப்பப்படும் செய்திகள் எனக் கூறப்பட்டன. 1900 ஆண்டு வரையிலும் இந்த மூட நம்பிக்கைகள் தொடர்ந்தன. 1900ஆம் ஆண்டில் Sigmund Freud என்பவர் கனவின் நவீன ஆராய்ச்சிக்கு வழி வகுத்தார். இவர் Austria வில் பிறந்தார். இவர் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டவர். இவரது அதிகமான நோயாளிகள் Hysteria அல்லது Neurosis வருத்தங்களால் பீடிக்கப்பட்டவர்கள். இவர் Hypnosis மூலம் தனது நோயாளிகளை குணப்படுத்தினார். இவர்களை பரிசோதித்ததன் மூலம் மூளைகளிலுள்ள நினைவுகளே கனவுகளாக பிரதிபலிக்கின்றன எனக் கூறினார்.



DREAM STATE

மனிதனும் மற்றைய முலையூட்டிகளும் ஒவ்வொரு நாளும் கனவு காண்கின்றனர். வயது வந்த மனிதர் சாதாரணமாக நித்திரை கொள்ளத் தொடங்கி 90 நிமிடங்களின் பின்னர் முதல் கனவு தோன்றி 90 நிமிடங்களுக்கு ஒரு தடவை திரும்ப திரும்ப தோன்றி மொத்தமாக 2 மணித்தியாலங்களுக்கு நடைபெறும். இவை Rem Sleep எனப்படும். கண் மூடியிருந்தாலும் நித்திரையின் போது, கண் முழி அசையும் நித்திரையின் போதே கனவுகள் உண்டாகும். ஒரு இரவுக்கு 5 கனவுகள் என்ற வீதத்தில் ஒருவரின் வாழ்நாளில் 136,000 கனவுகள் தோன்றும். அதாவது சராசரியாக ஒருவரின் வாழ்க்கையில் 6 வருடங்கள் கனவில் கழிகின்றது.

கனவுகளின் விளக்கங்களில் ஒன்றானது Rem நித்திரையின் போது, மூளை விருத்தியடைகின்றது என்றும், இதன்போது சில இரசாயன மீளமைப்பு வேலைகளும் நடைபெறுகின்றது எனக் கூறுகின்றது. இன்னொரு விளக்கக் கொள்கையின்படி Rem நித்திரையில் வரும் கனவின் போது மூளையின் Memory System இல் மேலதிகமாக சேகரிக்கப்பட்ட சில விடயங்களை மூளையிலிருந்து அகற்றும் பொழுதே கனவு ஏற்படுகின்றன என கூறப்படுகின்றது. இன்னொரு விளக்கத்தின் படி மூளையானது நினைவுகளாக இருக்கும் Memory ல் உள்ளவற்றை மீள் ஒழுங்குபடுத்தலின் போதே கனவுகள் தோன்றுகின்றன என்பதாகும். இன்று அதிகமான விஞ்ஞான நரம்புத் தொகுதியுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியாளர்களின் விளக்கத்தின்படி, கனவுகள் உடலுக்கு வெளியில் இருந்து வரும் எந்தவித சக்திகளாலும் உண்டாக்கப்படுவதில்லை. அதாவது கடவுளிடமிருந்தோ அல்லது வேறு எந்த சக்திகளாலோ கனவுகள் உண்டாக்கப்படுவதில்லை. எங்கள் உடலின் உள்ளிருந்தபடியே கனவுகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

கனவுகளானது மூளையின் கண்டபடி அலையும் ஒரு செயற்பாடு மூலம் பல நினைவுகள் ஒன்று சேர்ந்துதான் கனவுகளாக தோற்றம் அளிக்கின்றது என கூறப்படுகின்றது. மூளையின் பெரிய கலங்கள் 90 நிமிடங்களுக்கொருமுறை சில உணர்ச்சித் தூண்டல்களை மூளையின் Cortical பகுதிகளுக்கு அனுப்புகின்றது. இதனால் ஞாபகத்தில் உள்ளவை, உணர்ச்சியை கண்டறியும் உறுப்புகள், தசைநார்கள் கட்டுப்பாடு போன்றவை தூண்டப்பட்டு, அவற்றின் சேர்க்கையை மூளை விளங்கிக் கொள்ள முயலும் ஒரு நிகழ்வே கனவென கூறப்படுகின்றது. இதற்கு நல்ல ஒரு உதாரணமாக சில வேளைகளில் கனவுகளில் நாம் ஓடுவதற்கு முயற்சி செய்வது போல் இருக்கும். அதாவது மூளை எம்மை ஓடச் சொல்லும், தசைநார்களுக்கு கட்டளையிடும். ஆனால் நித்திரையின் போது கால்களின் தசைநார்கள் ஓய்வு நிலையில் இருப்பதால் கனவில் நாங்கள் ஓடமுடியாதது போல் தோன்றும்.

இன்னொரு விளக்கத்தின்படி, மூளையின் பல நினைவுகளை Memory ஐ மூளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் கனவுகள் தோன்றுகின்றன என்பதாகும். Computer பாவிப்பவர்கள் Hard Drive ஐ இடையிடையே Defragmentation செய்வார்கள். அதன்போது Hard Drive ன் பதிவுகள் மீள் ஒழுங்கு செய்யப்படும். இதைப்போலவே மூளை தன்னிச்சையாக தன் பதிவுகளை மீள் ஒழுங்கு செய்யும். இதன்போது வெவ்வேறு நினைவுகள் விசித்திரமான இணைப்புகளாக, கனவுகளாக தோன்றும். உதாரணத்திற்கு சில கனவுகளில், இலங்கையின் வீட்டிலிருந்து கனடாவின் வேலைத்தலத்திற்கு செல்வது போல் கனவுகள் தோன்றும். சில வேளைகளின் இரவில் படுக்கையில் உடுத்தியிருக்கும் உடுப்புடன் வேலைக்கு செல்வது போல் கனவுகள் தோன்றலாம்.


சில கனவுகள் பெரும் கண்டுபிடிப்புகளுக்கு உதவியாக இருந்துள்ளன. சேதன இரசாயனம் படித்தவர்களுக்கு Benzene என்னும் இரசாயன பதார்த்தத்தின் கட்டமைப்பு தெரிந்திருக்கும். ஆரம்பத்தில் காணப்பட்ட இரசாயன சேர்வைகளின் கட்டமைப்பு நீள்வடிவமாகவே இருந்தது. ஆனால் பென்சீன் ஒரு சங்கிலி போன்று வட்டவடிவமாக இருக்கும். இதைக் கண்டறிய நீண்டநாட்கள் எடுத்தன. இதைக் கண்டறிந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் கனவு காணும்போது அதில் ஒரு பாம்பு தன் வாலை விழுங்குவதுபோல் வட்டமாகஉடல் வளைத்தது. இதன்போது விழித்தெழுந்த ஆராய்ச்சியாளருக்கு பென்சீனின் கட்டமைப்பினை கண்டறிய உதவியது.


10 வருடங்களாக தமிழர் மத்தியில்

யோகாஸ்

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 102



**இடமிருந்து - வலம்**

1. ஈழத்தின் மீள கைப்பற்றப்பட்ட நகரங்களில் ஒன்று
3. சந்திரன் (வல-இட)
4. வியப்பு
9. பூமி
10. ஒன்றுக்கு மேற்பட்டவை (வல-இட)
11. பயிரிடை வளரும் தேவையற்ற தாவரங்கள்
12. தன்மையை குறிக்கும் பன்மை சொல்
13. துன்பம்

**மேலிருந்து கீழ்**

1. ஒரு துளை வாத்தியம்
2. இடி
3. பேய் (கீழ்-மேல்)
6. உளவறிதல்
7. சண்டை
8. சம்மதம் (கீழ்-மேல்)
13. உடலுறுப்பு

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் DECEMber 27, 99க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வா | ஜ | பா | ய் | ■ | து | ■ | சா |
| ய் | ■ | ■ | கா | ங் | கே | ய | ன் |
| மை | ம் | பொ | ■ | ■ | ■ | ■ | றோ |
| ■ | ■ | ■ | ஓ | ■ | ப | கி | ர் |
| கா | ந் | த | ர் | வ | ம் | ■ | ■ |
| ர் | ■ | வா | த | ■ | ப | ட் | டை |
| கி | ழி | ■ | ட | ■ | ர | ■ | ட் |
| ல் | கோ | க் | வை | ■ | ம் | ற | ம |

**#101இல் வெற்றி பெற்றோர்**

1)V. குணசிங்கம், NorthYork Ont.
2.S. Manilal, Toronto,Ont.


இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்

Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 - (905) 432-2422
CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 438-4357
(416) 399-3235

COMPUSERVICE
International

COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
(905) 432-2422
*FAX: (416) 431-5828
Email: compuservice@pathcom.com


இதேபோல் தையல் இயந்திரத்தை கண்டுபிடித்தவருக்கு இயந்திரத்தை அமைத்தாலும், ஊசியில் நூலைக் கோர்க்கும் அமைப்பை கண்டறிய முடியாமல் இருந்தது. கையினால் தைக்கும் தையல் ஊசியின் அடிப்புறத்திலேயே நூல் கோர்க்கப்படும். ஆனால் தையல் இயந்திரத்தில் ஊசியின் நுனிப்பகுதியிலே துவாரம் அமைத்து நூல் கோர்க்கப்படும். இதனையும் ஒரு கனவின் மூலமே இதை வடிவமைத்தவர் கண்டுபிடித்தார். இவரின் கனவின்போது, இவர் காட்டுமனிதர்களால் பிடிப்பட்டது போலவும் பின்னர் அவர்கள் இவரை ஒரு மரத்தில் கட்டிவைத்து அவரை கொல்வதற்காக ஒரு ஈட்டியுடன் அவரை நோக்கி ஒரு காட்டு மனிதன் வந்தான் அவன் வைத்திருந்த ஈட்டின் நுனியில் ஒரு ஓட்டை இருந்தது. காட்டுமனிதன் கனவில் அவரை குத்தியவுடன் அவர் கனவில் இருந்து விழித்தெழுந்து, தையல் ஊசியிலும் துவாரத்தை, அந்த ஈட்டியைப் போன்று நுனியில் அமைத்தார்.

அதிகமான கனவுகள் நினைவில் இருப்பதில்லை. இரவில் விழித்தெழும்போது நினைவில் இருந்தாலும், விடிகாலையில் நித்திரையை விட்டு எழுந்தவுடன் அது மறந்துவிடும். சில ஆராய்ச்சிகளின் படி கனவின் போது விழித்தால், திரும்பவும் நித்திரை கொள்ளும்போது கனவுகள் தொடருவதாகவும், சிலருக்கு பல நாட்கள் ஒரே கனவு தொடர்ந்து வருவதாகவும் காணப்பட்டுள்ளது. தற்போது நடந்து வரும் ஆராய்ச்சிகளின் படி ஒருவரின் கனவுகள் இன்னொருவருக்கு வயர்கள் மூலம் தலையில் இணைப்புகள் ஏற்படுத்தி அவரும் அதே கனவுகளை உணரக் கூடியதாகவும் செய்ய முடியும் என அறியப்படுகின்றது. அத்துடன் ஒருவருக்கு செயற்கையான உணர்வு அலைகளை மூளைக்கு அனுப்பி, அவர்களுக்கு கனவில் சில உணர்வுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

***************************


*விஜே குலத்துங்கத்தின் "அறிவுக்கு வேலை கொடு" வானொலி நிகழ்ச்சியை CTR வானொலியில் ஒவ்வொரு செவ்வாய் க் கிழமை இரவு 9மணி க்கு கேட்டு மகிழலாம்.*

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash &
waxing

ONTARIO'S DRIVE CLEAN




Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** ( MIDLAND & LAWRENCE )

☎ [416] **285-4998**

## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING

*>Railing >Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

*We are entering 5 th year service in Scarborough.*



**Better Work ...**
**Less Money**

**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஓட்டோ இங்.

**AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN




# Safety Truck
## Training School Ltd.

**Training & Trucking**
**Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்

**In Classes**

- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)

**Tel: (416) 616-5979 / (905) 793-9546**

**250 Summerlea Road, Brampton, ON**

## RUBAN PEST CONTROL

No Spraying
No Smelling
No Moving

**Complete Elimination of Roaches & Mice**

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள்,
கடைகள் அனைத்திலும் பூச்சி, எலிகள் தொல்லையா?
கவலையை விடுங்கள். அறவே ஒழிக்கஅழையுங்கள்

காந்தன் :(416) 894-9538 / 283-9538



# ஆரோக்கிய வாழ்வு (47)

- *N*. செல்வசோதி

## அறுபதிலும் இருபதை நோக்கி

நாற்பது வயதிற்குள் ஒரு நிரந்தரமான நிலைக்கு வந்துவிடவேண்டும். அப்போதுதான் பிற்காலத்தில் வாழ்நாள் முழுவதும் கவலையின்றி இருக்கலாம். அது என்ன நாற்பது வயது? அதற்கும் நிரந்தரமான நிலைக்கும் என்ன தொடர்பு? ஆம் இதற்குத்தான் ஒரு தொடர்புக்கணக்கினை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

பிறந்து ஐந்து வயதுவரை சுயமாக எதுவும் செய்ய முடியாத நிலை. ஐந்து தொடங்கியதுமே ஆரம்பக் கல்வி பின் நடு நிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல் நிலைக் கல்வி, தொழில் கல்வி போன்றவற்றை முடிக்கும் போது சுமார் இருபத்தைந்து வயதாகிறது. அதன்பின் தனக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் காலம். பின்மணம் முடித்து ஒன்றிரண்டு பிள்ளைகள் பிறந்ததும் குடும்பப் பொறுப்பு அதிகமாகிவிடுகிறது. அதன் பின் தொழிலில் முன்னேற முயற்சி, பொருளாதார விருத்தி போன்றவற்றில் கவனம் செலுத்தி அதனை அடையும் நிலையில் நாற்பது வயது பூர்த்தியாகிவிடும்.

இனிமேல் ஒரு பிரச்சினையியுமில்லையென்று யாரேனும் எண்ணினால் அது முற்றிலும் தவறு. உண்மையில் இனித்தான் நாற்பது வயதிற்குப்பின்பே ஒரு பாரிய பிரச்சினையே உதயமாகின்றது. இத்தனை ஆண்டுகளும் ஓய்வு, உணவு, உறக்கம் போன்றவற்றை சரியாகக் கவனியாது வாழ்வில் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தனது உடல் ஆரோக்கியத்தையே புறக்கணித்து காலத்தைக் கடத்திய நிலையின் பிரதிபலனை அனுபவிக்கும் நிலைதான் தொடங்குகிறது.

அத்துடன் திருமண வாழ்வில் அடியெடுத்து வைத்ததும் தனது ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்பும் வேலைக்கு முன்னுரிமை கொடாமல் "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்ற பழமொழியையும் மறந்து ஆயுள் காப்புறுதியை (Life Insurance) மட்டும் தவறாது செய்து விடுகின்றனர். இதனால் தனது கடமை முடிந்து விட்டதென்று எண்ணுகின்றனர்.

இதுவரை காலமும் ஓடிஓடி உழைத்தவர்கள் வீட்டில் உட்காரத் தொடங்கியதும் உடல் பருக்க ஆரம்பிக்கின்றது. வேலையிலிருந்து ஓய்வு பெறும் காலம் நெருங்கியதும் சிறிதுதூரம் நடந்தாலும் மூட்டுக்களில் வலிதான் பின் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவை தலைகாட்டும். தனது வேலையைக் கூட பிறர் உதவியின்றி செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது.

இவற்றுக்கெல்லாம் காரணம் தனது முன்னேற்றமும் தனது குடும்பத்தின் வழமான வாழ்வும்தான் முக்கியமென்று தன்னைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காது வாழ்ந்து வந்ததுதான். இதுவும் முக்கியமானதுதான். இதைவிடமுக்கியம் உடல் ஆரோக்கியம் தான் என்பதை காலம் கடந்தே சிந்திக்கிறான்.

இதனால் பயனேதும் விளையாது. உணவு உண்பது முதல் சகல நாளாந்த காரியங்களையும் தவறாமல் இதுவரை காலமும் செய்து வந்துள்ளோம். ஆனால் நமது உடல் ஆரோக்கியத்திற்காக எதனையும் செய்யமுடியவில்லை.

அன்பார்ந்த "விளம்பரம்" வாசகர்களே இப்போது ஒன்றும் கெட்டுவிடவில்லை. எமது நாளாந்த வாழ்க்கையில் 20 முதல் 30 நிமிட நேரமாவது சில யோகாசனப் பயிற்சி முறைகளையும் "பிராணாயாமம்" மூச்சுப் பயிற்சியையும் செய்து வந்தால் அறுபது வயதிற்கு மேலும் இருபது வயது இளைஞரைப்போல வாழலாம். இதற்குத்தான் இயலாவிட்டாலும் தினமும் இரண்டு கிலோமீட்டர் தூரமாவது நடந்து வருவது நன்மை பயக்கும்.


இத்துடன் தனிமை கிடைக்கும் போதும் அல்லது ஆலயங்களுக்குச் செல்லும் போதும் ஒரு பக்கமாக அமர்ந்து தியானப் பயிற்சி செய்து வந்தால் ரத்த அழுத்தம், மன இறுக்கம் (Tention Or Stress) என்பன நீங்கி முகத்தை ஒளிபெறச் செய்வதுடன் வாழ்நாளை அதிகரிக்க வைக்கும் என்பது உறுதி.


**யோகாசன வகுப்பு**

யோகாசனப் பயிற்சிகள் மூலம் உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள். யோகாசனப் பயிற்சி வகுப்புக்கு தொடர்புகொள்ள

இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)

நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு: - சத்தி: 291-5853



**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் ரேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ 261-6883

**Neelam SILK**

**நீலம் சில்க்**

*2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'*

**உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்**

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



புதிய வெளியீடுகள்


மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

'நீலம் சில்க்'

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)

CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484



**பூட்டு? சாவி?**

**KEERTH LOGSMITH**

**வீடு-வியாபாரம்-தொழிலகம்**

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

(416) 439-3709

Pager: 375-7330



கனடாவில் முதன்முதலாக தலைவாழையில் விருந்து படைத்தவர்கள்

**கிராமத்து விருந்து**



RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.

603 Kennedy Road, Scarborough, Ont.

☎: (416) 266-4240

*TAKEOUT ONLY*

சிக்கன் அல்லது பீவ்(**Beef**) முஸ்லிம் ஸ்ரைல் பிரியாணி, தலை வாழையிலையில் ஆக **$5.99** மட்டுமே



தமிழ் மக்கள் அனைவருக்கும் எங்கள் உளம் நிறைந்த நத்தார், புதுவரு நல்வாழ்த்துக்கள்


மட்டக்களப்புக்கு பணம் அனுப்ப

மட்டக்களப்புக்கு 24 மணி நேரத்தில் பணம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும். புளியந்தீவு, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு டவுண்

அழைக்கவும் ஜோாசப் (416) 266-4240

# முத்துக்குறள் மூன்று

ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி,
பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



உயர்ந்த குலம் சிறந்த குலம் என்றெல்லாம் பெருமைப்படுகின்றோம். ஆனால் இதை எந்த அடிப்படையில் தீர்மானிப்பது. சமூகத்தில் நிலவும் அந்தஸ்தை அடிப்படையாகக் கொண்டா? இல்லவே இல்லை. உயர்ந்த ஒழுக்கத்தின் அடிப்படையில் தான் உயர்குலம் என்று தீர்மானிக்கப்பட வேண்டும் என்று பணிக்கிறது குறள். ஒழுக்கத்தில் கெட்டவன் தாழ்ந்தவன் தான். ஒழுக்கத்தில் கெட்டவன்; தான் உயர்குடியில் பிறந்தவன் என்று கூறி என்னபயன்.

**"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்"**

ஒழுக்கம் உடையவராக வாழ்வதுதான் உயர்ந்த குடிப்பிறப்புக்கு எடுத்துக் காட்டாகும். ஒழுக்கம் தவறுகிறவர்கள் யாவராயினும் அவர்கள் இழிந்த குடியில் பிறந்தவர்களாகவே கருதப்படுவர்.

**"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"**

பார்ப்பனன் ஒருவன் கற்றதை மறந்து விட்டால் மீண்டும் படித்துக் கொள்ள முடியும்; ஆனால் பிறப்புக்குச் சிறப்பு சேர்க்கும் ஒழுக்கத்திலிருந்து அவன தவறினால் இழிமகனே ஆவான்.

ஆகவே இங்கு மிகவும் வலியுறுத்திச் சொல்வதென்னவென்றால் இவையெல்லாம் கேட்பதற்கும் படிப்பதற்கும் மிகஇலகுவாக இருக்கும் நீங்களோ இன்றைய விஞ்ஞான உலகில் யாவும் தெரிந்தவர்கள், யாவும் உணர்ந்தவர்கள். இன்றைய மக்கள் உலகனைத்திலும் பார்க்கும்போது தெரிந்தோ தெரியாமலோ பேராசை அறியாமை என்னும் இருளில் அகப்பட்டு கண்ணிருந்தும் குருடாய் நடந்து பெரும் துன்பம் துயரத்தில் வீழ்ந்து பெரும் அவமானங்களை ஏற்று ஏன் இந்த வாழ்வு என்று வெறுத்து வெறுத்து வாழ்வதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு ஆண்டவன் எல்லா சீர்சிறப்புகளையும் தந்திருக்கும் போது நாம் ஆண்டவன் மேல் பழியைப் போடலாமா?. இது விதியா? இல்லை மதியா? என்பதை நன்கு சிந்தித்து நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

என்னைப்போல்தான் மற்றவனும் அவனுக்கும் இன்பம் துன்பம் உண்டு. அவனுக்கும் வாழ உரிமை உண்டு. வாழத்தான் பிறந்தவன் அவனுக்கும் ஆசை, தேவைகளும் உண்டு என்பதனை நன்கு உணர்ந்து வாழ்ந்தால மண்ணுலகில் நாம் விண்ணுலக வாழ்வைக் காணமுடியாதா? அப்படி வாழ்ந்தால் மனிதன் மரணபயம் என்னவென்று அறியாமலேயே வாழ்ந்து விடலாம்.
அறிவீர்கள். அதை வென்று வாழ்வதற்கு உரிய பயன் நற்சிந்தனையும் இறை வந்தனையுமே. பிறருக்கு துன்பம் செய்யாதிருப்பதுதான் சிறப்பை பெருமையையும் தருவதாகும். எவ்விதம் நம்உணர்வுகளுக்கு அவை துன்பம என்று தெரிகிறதோ இதே அளவு துன்பத்தை அவர்கள் படும் போது அவர்கள் அனுபவிக்கும் போது என்ன பாடுபடுவார்கள் என்பதை நாம் பெற்ற நல்அறிவால் உணர்ந்து கொள்ளவேண்டும்.

**" அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போற் போற்றாக் கடை"**

**"இன்னா எனத்தா னுணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கட் செயல்"**

ஒருவன் தன்னுடைய வாழ்க்கையில் துன்பமானவை என்று அனுபவித்து அறிந்தவற்றை, மற்றவர்க்குச் செய்யாமலிருக்க வேண்டும. துன்பம் என்பது யாருக்கும் வந்தால் ஒரேமாதிரித்தான். அழிவும் அதேமாதிரித்தான். நம்உயிர்போன்றுதானே பிறஉயிர்களும் என்பதை அறிந்து வாழ்ந்தால் அதுவே சொர்க்கம். அதுவே சிறந்த வாழ்வு ஆகும்.

பொறாமை உள்ளவன் எந்தக் காரணம் கொண்டும் முன்னேற்றமடையான். அவனுக்கு ஆக்கமே இல்லை. அதே போல் ஒழுக்கமில்லாதவனிடத்திலும் உயர்வு நிலைக்க வாய்ப்பே இல்லை.

**"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
**ஒழுக்க மிலான்கண் உயர்வு"**

பொறாமையுடையனுக்கும், நல்லொழுக்கமில்லாதவனுக்கும் அமையும் வாழ்வு, உயர்வான வாழ்வாகக் கருதப்பட மாட்டாது. காலப்போக்கை உணர்ந்தே ஒவ்வொருவரும் அறநெறியைப் போற்றி வாழ்கின்றார்கள். சந்தர்ப்பம் சூழ்நிலைகள் மாறும்போது காலச் சக்கரச் சுழற்சியிலே நோக்கம் ஒன்றாக மார்க்கம் வேறாக உலகம் மாறுதல் அடைந்து வருகிறது. அதற்கேற்ப நாம் நாணல் புல்போல் வாழப்பழகிக் கொள்ள வேண்டும். காற்றடிக்கும் போது வளைந்து கொடுக்காத மரங்கள் முறிந்து விடுகிறது. வளைந்து கொடுக்கும் மரங்கள் முறியாது வாழ்ந்து விடுகின்றன.

அதேபோல் தான் வாழ்க்கையும். பலநூல்களைக் கற்றிருந்தாலும் உலகத்தை ஒட்டி ஒழுகாதவர்கள் அறிவில்லாதவர்கள் தான். கற்ற கல்வியின் பயன் உயர்ந்த நெறியில் நிற்றலேயாகும். சிலர் பலகற்றும் உலகத்தை ஒட்டி வாழாத காரணத்தால் பயன்பெறாதவர்களாகிறார்கள்.

**"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்**
**கல்லா ரறிவிலா தார்"**

(தொடரும்)

நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்

**செறண்டிப்**

**(F) பிறஸ் மார்க்கட்**



நாளாந்த பாவனைக்கு
தேவையான சகல
பொருட்களையும்
நாளாந்தம் மலிவு
விலைகளில் ஒரே
இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே
இடம்



**SERENDIB FRESH MARKET**

**Tel: (416) 269-9913**

2631 Eglinton Ave. East, Scarborough, Ont. M1K 2S2

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**



குடிவரவுச் சட்டம்
**Immigration Law**


**குற்றவியல் சட்டம்**
**Criminal Law**

குற்றவியல் தண்டனை
பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை
- Permanent Resident
குடியுரிமை
- Citizenship
குடும்ப ஒன்றிணைவு
- Family Sponsorship

பாதிக்கப்படலாம்.



*வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?*

அடுத்து
செய்யவேண்டியது என்ன?



முதலில்
வைத்தியசாலைக்கு
செல்லுங்கள்...

**பின் இவரை அழையுங்கள்...**

எஸ்.கே. தீசன்
(416) **631-6322**

**விளம்பர வினாடி வினா**

இந்தப் போட்டி நிகழ்ச்சி பிரதி
வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை
மாலை 7:30 மணியளவி 24
மணிநேர தமிழ் வானொலியில்
கேட்கலாம்

இப்போட்டியின் நோக்கம் -
"தமிழ் மக்களின் அறிவையும்,
ஆற்றலையும் வளர்ப்பதே
இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்"

பெயர் - விளம்பர வினாடி வினா!
நிகழ்ச்சி - ½ மணி நேரம்
பரிசு - $25 பெறுமதியான பத்திரம் (Voucher)

குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில்
பாவிக்க முடியும்

<u>நிபந்தனைகள் -</u>

1. 10 கேள்விகள் கேட்க்கப்படும். 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு விடை தரவேண்டும்
2. 5 வினாடிகள் வழங்கப்படும் நிகழ்ச்சி நடத்துபவரின் முடிவே இறுதியானது.
3. குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவரிற்கு மேற்பட்டவர் 7 அல்லது 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு சரியாக விடை கூறினால், அவரே வெற்றி பெற்றவராக கொள்ளப்படும்.
மேலும் இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒரே எண்ணிக்கையான சரியான பதில்கள் கூறினால், நிகழ்ச்சி நடத்துனர் குலுக்கல் மூலம் ஒரு அதிஸ்டசாலியை தெரிவு செய்வார்.

<u>குறிப்பு</u>

1. வினாக்களின் விடைகள் ஏற்கனவே விளம்பரம் பத்திரிகையில் வந்திருக்கும்.
2. வினாவிற்குரிய விடை ஒன்றிற்கு மேற் பட்டதாக இருப்பினும் விளம்பரம் பத்திரிகையில் வந்தவிடையே சரியெனக் கொள்ளப்படும்.
3. இப்போட்டி நிகழ்ச்சி விளம்பரம் பத்திரிகையின் ஆதரவில் நடைபெறுகின்றது.

<u>பரிசு வழங்கும் நிறுவனம்</u>

இந் நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுபவர்களிற்கு
சபோனா ஸ்தாபனத்தில் பாவிக்க கூடிய பத்திரங்கள்
வழங்கப்படும். ஒவ்வொரு பத்திரமும் $25
பெறுமதியானவை.

# விளையாட்டுத் தகவல்கள் (44)

–எஸ். கணேஷ்



## GO LEAFS GO! (HOCKEY)

இன்று ரொரன்ரோவில் Maple Leafs Hockey ஐ அறியாத எம் தமிழர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்றால் மிகையாகாது. ஏனெனில் கனடாவில் ஹொக்கி ஒரு தேசிய விளையாட்டாக கருதப்படுகின்றது. அத்துடன் கடந்த பல வருடங்களாக Toronto Maple Leafs அணியின் திறமையும் மேலோங்கி வருகின்றது. ரொரன்ரோவில் முன்பு தமிழ் ரசிகர்கள் Montreal Canadians க்கு மிகவும் ஆதாரவான காலம் மாறி எமது ஹொக்கி ரசிகர்கள் எல்லாம் ரொரன்ரோ மேபிள் லீவ்ஸ் க்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைமை மாறி வருகின்றது. ரொரன்ரோ தமிழர் பலரும் தற்போது Hockey, Basket Ball, Base Ball ரசிகர்களாக மாறி வருகின்றனர். இதற்கெல்லாம் மெருகூட்டுவது போல் ஹொக்கியிலும் Basket Ball இலும் ரொரன்ரோ அணிகள் இவ்வருடம் முன்னணி வகிக்கின்றன.

1917ஆம் ஆண்டு Toronto Maple Leafs அணி கனேடிய தேசிய சின்னமான Maple Leaf ஐ தமது இலச்சனையாக கொண்டு முதன் முதலில் NHL இல் விளையாட தொடங்கியது. 1931 ஆம் ஆண்டு Maple Leaf Gardens Toronto வில் கட்டப்பட்டது. கட்டிய முதல் வருடமே 1932ஆம் ஆண்டு Stanley Cup ஐ வென்றது. அதை தொடர்ந்து 1932, 1942, 1945, 1947, 1948, 1949, 1951, 1962, 1963, 1964, 1967 ஆகிய ஆண்டுகளில் இதுவரை 11 தடவைகள் Stanley Cup ஐ வென்ற பெருமை Maple அணியை சாரும். சென்ற வருடம் (ACC) எயர் கனடா சென்ரர் முதன்முதலில் கட்டப்பட்டு எடுத்த எடுப்பிலேயே ரொரன்ரோ அணி திறமையாக விளையாடியது. Play-offs இல் கால் இறுதி ஆட்டம் வரை சிறப்பாக விளையாடி வந்த அணி இறுதியில் தோல்வியுற்றது. ஆனால் இவ்வருடம் இதுவரை மிகவும் திறமையாக விளையாடி வரும் மேபிள் லீவ்ஸ் அணி தற்போது Eastern Overall Standings இல் முதல் இடத்தில் உள்ளது. இதுவரை 40 புள்ளிகளைப் வென்று 17 வெற்றியும் 10 தோல்விகளும், 4 சமநிலையும் பெற்று North East Division இலும் முதல் இடத்திலேயே உள்ளது. முக்கியமாக Maple Leaf இன் திறமைகளை மீண்டும் பளிச்சிட வைத்தவர் என்றால் Coach ஆன Pat Quinn என்றால் மிகையாகாது. ஆனால் பல ஆட்டங்களில் லீவ்ஸ் ஐ அசைக்க முடியாது என நிரூபித்தவர். Goal Keeper ஆன Curtis Josephயே ஆகும் 1967ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை இன்றும் Maple Leafs Stanley Cupஐ வெல்லவில்லை. மிலினியம் வருடமான Year 2000 இல் வெல்லுவதற்கான நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அணியும் திறமையாக விளையாடி வருகின்றது. பொறுத்திருந்து பார்ப்போம். எமது கண்களுக்கு புதுவருடத்தில் Maple Leafs அணி விருந்து படைக்குமா என்று!!!!

## GO RAPTORS GO!!! (Basket Ball)

ரொரன்ரோவில் மற்றும் தற்போது எம் இளைஞர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று வரும் ஒரு விளையாட்டு துறை Basket Ball (கூடை பந்தாட்டம்) ஆகும். இதற்கு கட்டியம் கூறும் வகையில் இவ் வருடம் Raptors இன் விளையாட்டு அற்புதம்! அதிசயம்! ஆனந்தம்!

1995ஆம் ஆண்டு NBA Franchise இல் Raptors முதன்முதலாக பிரவேசித்தது. எடுத்த எடுப்பிலேயே ஒரு சிறந்த Rookie (MVP) ஐ NBA உலகத்திற்கு Damon Stoudamire ஐ அறிமுகம் செய்தது. Raptors அணி பல தோல்விகளை சந்தித்தாலும் 1995-1996 MVP (Rookie) விருது Stoudamire க்கு கிடைக்கப்பெற்றது.

கடந்த மூன்று ஆண்டுகளிலும் Toronto Raptors இன் பெறு பேறுகள்

| | வெற்றிகள் | தோல்விகள் |
|---|---|---|
| 1995 - 1996 | 21 | 61 |
| 1996 - 1997 | 30 | 52 |
| 1997 - 1998 | 18 | 66 |

தோல்விகளைப் பாடமாக வைத்து Raptors அணி இவ்வருடம் வெற்றிகளை குவிக்க தொடங்கியுள்ளது. 1998 ஆம் ஆண்டு Raptors அணி மறுசீரமைக்கப்பட்டது. புதிய Coach ஆக Butch Carter தெரிவு செய்யப்பட்டார். பல வருடம் அனுபவம் வாய்ந்த Charles Oakley, Kevin Willis, Deli Curry, Muggsy Bogues போன்றவர்கள் Toronto அணிக்கு தருவிக்கப்பட்டனர். இப்படியான திறமை வாய்ந்த வீரர்கள் ஒன்று சேர்ந்தவுடன் இளம் வீரர்களான Vinece Carter, Doug Christe, Dee Brown ஆகியோர் தங்கள் திறமைகளையும் காட்டத் தொடங்கினர்.

தற்போது Vinece Carter இன் ஆட்டத்தை பார்ப்பதற்காக ரசிகர்கள் குவியத் தொடங்கி உள்ளனர். தற்போது மிகவும் சிறந்த பல அமெரிக்க அணிகளை ரொரன்ரோ அணி மண் கவ்வச் செய்துள்ளது. சென்றவாரம் திறமையான அணியான L.A. Lakers ஐ 111 - 102 புள்ளிகள் வித்தியாசத்தால் ரொரன்ரோ அணி தோற்கடித்தது. இதில் Vinece Carter 34 புள்ளிகளை ரொரன்ரோவிற்கு பெற்று கொடுத்தார்.

முன்பு Micheal Jordan பற்றி எமது இளைஞர்கள் கனவு கண்ட காலம் மாறி Vinece Carter யை பற்றி கனவு காணும் காலம் வந்துள்ளது. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் 12 ஆட்டங்களில் வெற்றியும் 7 ஆட்டங்களில் தோல்வியும் பெற்று East Division இல் முதல் இடத்தில் ரொரன்ரோ அணி உள்ளது. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ரொரன்ரோ வீரர்களான Carter 455 புள்ளிகளையும், Christe 435 புள்ளிகளையும், Mc Grady - 425 புள்ளிகளையும், Davis - 453 புள்ளிகளையும் Dee Brown - 404 புள்ளிகளையும் Average அடிப்படையில் பெற்றுள்ளனர். இப்படியாக தொடர்ந்து திறமையாக Raptors அணி விளையாடுமானால் Year 2000 இல் நிச்சயமாக Play-Offs க்கு தகுதி பெறும் நிச்சயம். ACC மைதானத்தை தங்கள் Home ஆக கொண்ட Leafs, Raptors இவ்விரண்டு அணிகளும் மிலினியம் வருடத்தில் சாதனை படைக்குமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.


**வியோன் பஷன்ஸ் & கிவ்ற்ஸ்**

கிறிஸ்மஸ் ஐ முன்னிட்டு **மாபெரும் மலிவு விற்பனை**

*Clearance Sale*

* ஆண், பெண் சிறுவர்களுக்கான ஆடைகள், குளிர்கால ஆடைகள்
* சிறுவர்களுக்கான குளிர்கால ஆடைகள் $3.00 இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
* பற்றிக் உடுப்புக்கள் நவீன டிசைன்களில்
* 2pc Nighty / House Coat அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்




மேரி - (416) 261-9215

2813 Eglinton Ave. E. (Danforth/Eglinton) Cancey Restaurant க்கு அருகாமையில்



100 % உத்தரவாதம்

**EASY WEIGHT LOST**

3 மாதத்துக்குள் மூலிகை மருந்து மூலம் உங்கள் உடல் பருமன் குறைத்து அழகுள்ள ஆணாக அல்லது பெண்ணாக திகழுங்கள். உடல் பருமன் குறைக்காவிடில் பணம் திருப்பத் தரப்படும். கனடிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு உலகில் 45 நாடுகளில் சுமார் 300 மில்லியன் மக்களால் பாவிக்கப்படும் உடல் நலத்துக்கான மூலிகை மருந்து

1. நீரிழிவு
2. இரத்தக் கொதிப்பு
3. கொழுப்பு
4. பலவீனம்
5. ஆண்மைக் குறைவு
6. தோல் வியாதி

அனைத்துக்கும் தனித் தனியான மூலிகை மருந்து உள்ளது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அமெரிக்க மக்களால் பாவிக்கப்படும் கனடிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட உன்னதமான மூலிகை மருந்துகள்

ஜோசப் - 266-4240, 424-2164



**RENOVATION**

**KATHIR & ASSOCIATES**



※ Complete Basement
※ Bath Rooms
※ Kitchen
※ Plumbing
※ Painting



போன்ற உங்களின் சகல விதமான திருத்த வேலைகளிற்கும் அழையுங்கள் : (416)804-5628



**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT** தமிழில் இலவச ஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766

2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7



**$400 அரசு சலுகை பெற!**



கனேடிய அரசின் கல்விக்கான மானியம் $400 இலவசம்! டிசெம்பர் 31ம் திகதிக்கு முன் நிதியத்தில் சேர்ந்து கொள்வதன் மூலம் $400 சலுகை பெறலாம்.

* அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம் (R.E.S.P)
* உலகின் எங்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.
* இன்னும் பல சலுகைகள் உண்டு.

தொடர்புகளுக்கு - **சீலன் .A**

**The Children Education Trust of Canada**

**Tel: (416) 451-0271 / 292-3582**

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம் & சண்

### 1970

| | |
|---|---|
| 1. அனாதை ஆனந்தன்* | 2. என் அண்ணன் * |
| 3. எங்கள் தங்கம்* | 4. எங்க மாமா* |
| 5. எங்கிருந்தோ வந்தாள்* | 6. எதிர்காலம் |
| 7. எதிரொலி | 8. ஏன் |
| 9. கல்யாண ஊர்வலம் | 10. கண்ணன் வருவான் |
| 11. கண்மலர் | 12. கஸ்தூரி திலகம் |
| 13. காதல் ஜோதி | 14. காலம் வெல்லும் |
| 15. காவியத் தலைவி | 16. சங்கமம்* |
| 17. சி.ஐ.டி. சங்கர் | 18. சிநேகிதி |
| 19. சொர்க்கம்* | 20. தரிசனம் |
| 21. தலைவன் | 22. தபால்காரன் தங்கை |
| 23. திருடாத திருடன் | 24. திருமலை தென்குமரி* |
| 25. தேடிவந்த மாப்பிள்ளை* | 26. நடு இரவில் |
| 27. நம்ம குழந்தைகள் | 28. நம்மவீட்டு தெய்வம் |
| 29. நவக்கிரகம் | 30. நிலவே நீ சாட்சி |
| 31. நூறாண்டுகாலம் வாழ்க | 32. பத்தாம் பசலி |
| 33. பாதுகாப்பு* | 34.பெண் தெய்வம் |
| 35. மாலதி | 36. மாணவன் |
| 37. மாட்டுக்கார வேலன்* | |
| 38. ராமன் எத்தனை ராமனடி | |
| 39. வியட்நாம் வீடு | |
| 40. விளையாட்டுப் பிள்ளை | 41. வீட்டுக்கு வீடு |
| 42. வைராக்கியம் | 43.ஜீவனாடி |

இவ்வாண்டும் 43 படங்கள் வெளிவந்தன. எங்கமாமா, எங்கிருந்தோ வந்தாள். எதிரொலி, சொர்க்கம், பாதுகாப்பு, ராமன் எத்தனை ராமனடி, வியட்நாம் வீடு, விளையாட்டுப் பிள்ளை ஆகிய எட்டுப் படங்கள் சிவாஜியின் படங்களாக வெளிவந்தன. முதன்முதலாக சிவாஜி அவர்களைக் கதாநாயகனாக வைத்து இயக்குநர் கே. பாலசந்தர் கதை, வசனம் எழுதி இயக்கிய படம. 'எதிரொலி' மிகப் பெரிய நடிகரை வைத்து இயக்கினாலும் இப்படம் பாலசந்தருக்குச் சோதனையாகவே அமைந்தது. அதன் பின் திரு. பாலசந்தர் சிவாஜியை வைத்துப் படமே எடுக்கவில்லை. மிகச் சிறந்த படங்களாக 'எங்கிருந்தோ வந்தாள்', வியட்நாம் வீடு', இராமன் எத்தனை இராமனடி' ஆகிய படங்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. சொர்க்கம், எங்கமாமா, விளையாட்டுப் பிள்ளை ஆகிய படங்கள் 100 நாட்களைத் தாண்டியது.

மக்கள் திலகம் முந்தைய ஆண்டைவிட 3 படங்கள் கூடுதலாக நடித்து 5 படங்கள் வெளிவந்தன. 'என் அண்ணன்', எங்கள் தங்கம்', 'தலைவன்', 'தேடி வந்த மாப்பிள்ளை', 'மாட்டுக்கார வேலன்', ஆகிய வசூல் படங்களில் நடித்திருந்தார். ஏனைய படங்கள் பெரும்பாலானவற்றில் ஜெய்சங்கர், முத்துராமன், நாகேஷ், ஜெமினி கணேசன், ஆனந்தன், அசோகன், சிவகுமார் ஆகிய நட்சத்திரங்கள் நடித்திருந்தனர். சிறந்த பல குடும்பப் படங்கள் வெற்றிப் படங்களாயின. நடிகர், தயாரிப்பாளர் திரு. பாலாஜி அவர்களது தயாரிப்பில் வெளிவந்த சுமார் 16 படங்களில் கதாநாயகனாக நடித்து இரசிகர்களின் கண்ணீர்த் துளிகளைப் பரிசாக கோடியாகப் பெற்றவர் நடிகர் திலகம் அவர்கள்.

நடிகர் திலகம் அவர்களது 59வது பிறந்த நாளின் போது மனம் நிறைந்து மகிழ்ந்து பாராட்டுத் தெரிவித்த நடிக நண்பர் திரு. கே. பாலாஜி அவர்களின் செய்தியிலிருந்து... ஒப்பற்ற கற்பனைத் திறனால் உயிர் ஊட்டங் கொண்ட தன் நவரச நடிப்பால் நிகரில்லா ஓர் தனி சகாப்தத்தை உருவாக்கியதோடு இன்றைய நடிக நடிகையர்களின் கலைவாழ்விலே ஓர் கலங்கரை விளக்கமாகத் திகழும் அண்ணார் திரு. சிவாஜி கணேசன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது.

பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போல் அண்ணார் வாழும் இந்நாளில் நாமும் நடிகராக அவரோடு ஒன்றுகூடி வாழ்கிறோம். அது நமக்கெல்லாம் கிடைத்தற்கரிய பெருமையிலும் பெருமை.

ஆசிய விருது பெற்ற அண்ணார் அவர்களுக்கு இச் சிறியோனை அறிமுகப்படுத்தி வைத்தது 'துளிவிஷம்'. 1953ம் ஆண்டிலே நான் நரசு ஸ்ருடியோவிலே பணியாற்றி வந்த நாளிலே அத் 'துளி விஷத்தை' அமிர்தமாகக் கொண்டேன். நானும் நடிகனானேன், தயாரிப்பாளனானேன். 'சுஜாதா சினி ஆட்ஸ் உருவாயிற்று. முதலாவது தயாரிப்பான சுஜாதாவின் 'தங்கை' வழியாக அதன் பின் அவர் 2. 'என் தம்பி' யாக என்னை ஏற்று எனக்காக 3. 'திருடன்' என்ற நிலைக்கும் ஆளாகி 4. 'எங்கிருந்தோ வந்தாளுக்கா' 5. 'ராஜா'வாக மாறி 6. 'நீதி' கூற அது கண்டு கலைத்தாயே அண்ணன் அவர்களை 7. 'என் மகன்' எனப் பெருமையோடு அரவணைக்க, அன்னையே 8. 'உனக்காக நான்', என் அண்ணன் அகமகிழ்ந்து 9. 'தீபம்' ஏற்றி 10. 'தியாகம்' பல செய்து, 11. 'நல்லதோர் குடும்பம்' உருவாக்கி அங்கு 12. நீதிபதி' யாகி நின்று 13. 'தீர்ப்பு' வழங்கி எல்லோரையும் 14. 'பந்தம்' கொண்டு அணைத்து 'பாசமுள்ள 'மருமகளை'யும் ஒன்று சேர்த்து தம்பி நாமெல்லாம் 16. 'விடுதலை' பெற்ற மக்கள் அறிவுரை கூற, அதன் வழி நின்று அண்ணார் அவர்களைக் கொண்டு மக்கள் மகிழ இதுவரை பதினாறு படங்களை வழங்க வைத்த (சிவாஜி அண்ணன் அவர்கள் மட்டும் நாயகனாக) தமிழ்த் திரைப்பட வரலாற்றிலே என்னைத் தயாரிப்பாளராக உருவாக்கிய பெருமை அண்ணார் அவர்களையே சாரும்.

### 1970ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்

| | |
|---|---|
| படம்: | வியட்நாம் வீடு |
| விசேட பரிசு: | திருமலை தென்குமரி |
| நடிகர். | சிவாஜி கணேசன் (வியட்நாம் வீடு) |
| கதை: | K. சுந்தரம் " |
| டைரக்டர்: | P. மாதவன் " |
| நடிகை: | ஜெயலலிதா (எங்கிருந்தோ வந்தாள்) |
| நகைச்சுவை நடிகர்: | சீனிவாசன் (C.I.D. சங்கர்) |
| நகைச்சுவை நடிகை: | மனோரமா (திருமலை தென்குமரி) |
| குழந்தை நட்சத்திரம்: | கிருஷ்ணகுமார் (நம்ம குழந்தைகள் ) |
| பின்னணி: | TMS, P. சுசீலா |
| இசை: | M.S. விஸ்வநாதன் (எங்கிருந்தோ வந்தாள்) |
| கதை-டைரக்ஷன்: | K. பாலசந்தர் (இருகோடுகள்) |



'தேடி வந்த மாப்பிள்ளை'-எம்.வி. ராஜம்மாவுடன்

உள்ளளவும் மறவாது எண்ணிச் செயல்படுவதே மனித தர்மம் என எண்ணி அண்ணார் திரு. சிவாஜி கணேசன் அவர்கள் இன்னும் பல ஆண்டு காலம் தொடர்ந்து கலைச் சேவை புரிய இறைவனை தினமும் வேண்டுகிறேன்.

இப்படிப் பலருக்கும் பலவழிகளிலே உயர்ந்திட உறுதுணையாக நின்று பணிபுரியும் நமது அண்ணார் அவர்களின் 59வது (1980ல்) பிறந்தநாள் விழாவை பெரும் சிறப்போடு கொண்டாடும் நாளிலே நாமெல்லாம் ஒன்று கூடி வாழ்த்துவதோடு உடன் இருந்து உயர் நிலைக்குக் கொண்டு வந்தவரை உயிர்

## நான் வாழப் போகிறேன்



-வீணை மைந்தன்

### சுவடு 43

முதன்முதல் கதாநாயகியாகப் பராசக்தியில் நடித்த (1952) திருமதி. பண்டரிபாய் தொடக்கம் இறுதியாக வெளிவந்த 'பூப் பறிக்க வாருங்கள்' வரை சுமார் 50 க்கும் மேற்பட்ட கதாநாயகிகளுடனும், நூற்றுக்கு மேற்பட்ட துணை நடிக, நடிகைகளுடனும் சிவாஜி அவர்கள் இணைந்து மிக அதிகமான நான்கு தலைமுறை நட்சத்திரங்களுடன் நடித்த பெருமையைத் திரையுலக வரலாறாகப் பதிவு செய்துள்ளார்.

### சுவடு 44

தமிழ் திரையுலகின் இன்றுவரை உயிருடன் வாழும் மூத்த கலைஞர்களுள் அனைவரினதும் பாராட்டதலுக்கும் போற்றுதலுக்குமான ஒரு கலைஞர் இப்போதும் நடித்து வருகிறார்.

அண்மையில் வெளியான 'பூப்பறிக்க வாருங்கள்' படத்தில் கூட சிவாஜி அவர்களின் சகோதரனாக நடித்திருந்தார். திரையுலகில் நான்கு தலைமுறை நட்சத்திரங்களுடன் நடித்த நடித்து வருபவரும் கூட. 'குருசாமி' என்று பக்தியுடன் ஐயப்ப பக்தர்களால் போற்றப்படும் அந்த நல்லவரை அநேகம்பேர் வில்லனாகவே பார்த்திருப்பீர்கள். அவர்தான் மதிப்பிற்குரிய திரு. எம். என். நம்பியார் அவர்கள். எந்தவிதத் தீய பழக்கங்களும் இல்லாத சிறந்த மனிதர் ஒருவர் சுமார் ஐம்பது ஆண்டுகளாகத் திரையுலகில் வாழ்ந்து வருகிறார் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கும்.

எந்தவிதமான சர்ச்சைகளுக்கும் ஆளாகாத அந்த உயர்ந்த பண்பாளர் நடிகர் திலகம் பற்றி அவரது 51வது ஆண்டு கலைச் சேவையைப் பாராட்டு முகமாகக் கூறிய சில நினைவுகளை (1986ல்) இங்கே மீண்டும் நினைவு படுத்துவது இத்தொடர் கட்டுரைக்கு வலிமை சேர்ப்பதாகும்.

"... எனது இனிய நண்பர் சிவாஜி கணேசன் அவர்களது 51வது ஆண்டு கலைச் சேவையைப் பாராட்டுபவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமை கொள்கிறேன், பூரிப்படைகிறேன். அவர் ஒரு பிறவி நடிகர். பிறவி நடிகன் என்று யாரும் இருக்க முடியாது என இயக்குநர், நண்பர் ஒருவர் கூறியிருந்தார். அவருடைய கருத்தை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. பிறந்தவுடனேயே புத்திசாலிக் குழந்தைகளை புரிந்து கொள்கிறோம் விளையும் பயிர் மூளையிலேயே தெரியும் என முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நடிப்பதற்காகவே பிறந்தவர் நடிகர் திலகம். அகில உலக நடிகர்களையே 'திலகம்' என்ற பொருத்தமான பட்டத்தை 'பேசும்படம்' வாசகர் ஒருவர் வழங்கினார் என்று கருதுகிறேன். அவருக்கு வழங்கப்பட்ட 'பத்மஸ்ரீ', 'பத்மபூசணம்' விருதுகளை விட 'நடிகர் திலகம்' என்ற பட்டத்தை வழங்கியவர்கள் வாழ்க! நடிகர் திலகத்தின் நடிப்பை ஒரு சிலர் 'ஓவர் நடிப்பு' என்று சொல்வார்கள். அதில் ஓரளவு உண்மை இருக்கிறது. ஆனால்.... அந்த நடிப்பை அவர் தெரிந்தேதான் செய்கிறார். வசனங்களைப் பேசாமல்... நடிப்பின் மூலமே தான் நினைப்பதை... வெளிப்படுத்தக் கூடிய நடிகர் அவர் ஒருவர் தான்!

உதாரணமாக... நமது முன்னோர்களாலும் அறிஞர்களாலும் நூற்றுக்கணக்கான வருஷங்களாக நமக்குச் சொன்ன கருத்தைத் தான் மறைந்த கவியரசு கண்ணதாசன் அவர்கள் நமக்கு வழங்கினார். ஆனால், கவிஞர் சொன்னது எளிமையாகவும் சுலபமாக நம்மால் புரிந்து கொள்ளும் வகையிலும் இருந்ததால் நம்மால் அவரை மறக்கமுடியவில்லை. நமது நடிகர் திலகத்தின் அணுகு முறையும் அதே போன்றது தான். ஒரு அசைவால் பார்வையால் எவ்வளவோ விசயங்களை நமக்கு உணர்த்திவிடுவார். அவருடைய நடிப்புக் கலைக்கு ஐம்பத்தியொரு வருடம் என்பது (இது 1986ல் கூறப்பட்டது) மிகமிகச் சாதாரணமானது. இன்னும் பல ஐம்பத்தியொரு வருடங்கள் அவர் நடிக்க வேண்டும் என்று விரும்புபவன் நான்.

எங்கிருந்தோ வந்தாள்



ஆசைக்கு அளவில்லை அல்லவா...? நடிப்புக் களஞ்சியமான அவர்... " நடிப்பை இன்னும் கற்றுக் கொள்கிறேன்... என்று கூறுகிறார் என்றால் வியப்பாக இல்லை! நல்லது எதுவானாலும் ஏற்றுக்கொள்ளும் நல்ல உள்ளம் படைத்தவர் அவர். நடிப்பிற்கு எல்லையில்லை என்பது அவரது கருத்து. அவருடன் நான் நடித்த படங்களை நினைவு கூர்ந்து பார்க்கிறேன். 'பாகப் பிரிவினை'யில் தம்பியாக, 'பாதுகாப்பில்' அண்ணனாக, 'பாசமலர்' 'மக்களைப் பெற்ற மகராசி'யில் மைத்துனராக, 'உத்தம புத்திரன்' மாமாவாக, சில படங்களில் தோழனாக பல படங்களில் எப்போதும் போல் எதிரியாக என்று அவருடன் நடித்த நாட்கள் நினைத்தாலே இனிக்கும் நல்ல நாட்கள். (1986வரை) 34 ஆண்டுகளாக தொடர்ந்தாற்போல (இன்றும் தான்) படப்பிடிப்பிற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வரும் ஒரே நடிகர், நடிகர் திலகம் தான். அவரது இந்தப் பழக்கத்தை மற்ற நட்சத்திரங்கள் பின் பற்றினால் தாயாரிப்பாளர்களுக்குப் பல இலட்சங்கள் வீணாகாது. அவருக்கு வயதாகி விட்டது. எனக்கும் தான் ஆனால், நடிப்புக்கு ஏது வயது... வரம்பு? நடிகர் திலகத்தின் நடிப்பு இளமை குன்றாதது. நடிப்பில் அகில உலகப் புகழைப் பெற்றிருக்கும் என் நண்பர் நடிகர் திலகம் வாழ்க!

*(சுவடுகள் தொடரும்)*

வேலைக்கு ஆட்கள் தேவை

# Textile Jobs! Textile Jobs!

## Experienced
## Sewing Machine Operators

அனுபவமிக்க தையல் மெசின் இயக்கக் கூடியவர்கள்
உடனடிய வேலைக்கு தேவைப்படுகின்றது

Up To

**$500 Bonus**

## For New Employees Only

புதிதாக சேர்பவர்களிற்கு மாத்திரம்
*(Some Conditions apply / சில கட்டுப்பாடுகள்)*

**Leading Edge Facility*
**Full Benefits page*

புதிதாக சேர்பவர்களிற்கு முன்னேறக் கூடிய வசதிகளும் பல நன்மைகளும் இருக்கின்றது

**Contact: RANKA GROUP**
300 Danforth Rd.
NEAR WARDEN SUB-WAY STATION
(Warden ஸ்ரேசனிற்கு அண்மையில்)

HELP WANTED

## 10வது ஆண்டில் விளம்பரம்

உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI
Tel. (416) 282-8059
Fax. (416) 282-4978

**மாதமிருமுறை இலவசமாக வெளிவரும் சமூகமுன்னேற்றப்பத்திரிகை**

- அறிவும் ஆக்கமும்
- விளையாட்டுத்தகவல்கள்
- மாணவர் தகவல்கள்
- அறிந்திருக்கச்சில
- அன்றிலிருந்து இன்று வரை சினிமா
- ஒன்ராறியோவில் வாகனம் செலுத்துதல்
- ஆரோக்கிய வாழ்வு
- விண்வெளி
- மருத்துவம்
- புதிய நூற்றாண்டில் கணணி
- நாடும் நமது இல்லமும்
- வீடு விற்க, வாற்க, வாடகைக்குப் பெற

## EZ DRIVING SCHOOL



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த
மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச
அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம்
பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்
*JEYAKUMAR* ✆ (416) 283-4100
Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

## NEW Technology
Security and Sound Inc.



உங்கள் வாகனங்களுக்குத் தேவையான

| | |
|---|---|
| *Car Alarm / Starter | *Performance Accessories |
| *Type Bars / Fog lLamp | *Car Stereo |
| *Scanner /LED | *Car Pager/Signs |

நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும், பொருத்திக்கொள்ளவும் நாடுங்கள்
SALE AND REPAIR — WE ALSO DO ELECTRICAL WORK
TEL: (416) 335-4070 — Ratheesh Cell: (416) 451-0287
Fax: (416) 335-9936 — Shanger- Cell: (416) 451-4517
80 Dynamic Dr. Unit # 25, Scarborough, Ont. M1V 5A5

## YARLCAN
## STEAM CLEANING





உங்கள் சகலவிதமான
**Cleaning**
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

**Tel: 724-9085**
**Pager : 600 -0335**
**Cell: 721-9709**

## MOVING VAN MOVING VAN

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய்
வருவதற்கான சேவைகளும், மற்றும்
பொருட்களை இடமாற்றம்
செய்வதற்கான சேவைகளிற்கு



☎: (416) **759-0557**

# சாரதிகளே!

# TRAFFIC TICKET

# பெற்றீர்களா?



- Speeding
- Stop Sign
- Red Light
- Seat Belt
- Improper Turn

Careless Driving •
Accidents •
Fail to Remain/Report •
Over speed •
Impaired Driving •
Drive under suspension •
Dangerous Driving •

**Peter Joseph**

- ஒரு முறை அழையுங்கள்.
- உண்மையை உணருங்கள்
- நண்பர்களுக்கும் கூறுங்கள்

**$150 மட்டுமே**

புள்ளிகளைக் காப்பாற்றுங்கள்
முற்பணம் தேவையில்லை
நீங்களும் வரவேண்டியதில்லை
தேவை உங்கள் ரிக்கட் மட்டுமே

பல ஆண்டுகள் வெற்றியின் அனுபவங்கள் **பீற்றர் ஜோசப்**

## The Traffic Ticket Specialists

**Tel: (416) 537-7737 Fax: (416) 537-9035**


## சூரியக்குடும்பம் 23 விண்வெளி

*தருபவர்- கனி*

சூரியக்குடும்பத்தில் சந்திரன் என்ற பதம் பொதுவாக கிரகங்களைச் சுற்றி வரும் துணைக் கிரகங்களைக் குறிக்கும். உதாரணமாகச் சொல்வோமாயின் வியாழனைச் சுற்றிவரும் அதன் துணைக் கோள்கள் எல்லாம் வியாழனின் சந்திரன்கள் எனப்படும். ஒரு கிரகமானது ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல சந்திரன்களையோ கொண்டிருக்கலாம். சில கிரகங்கள் துணைக் கிரகங்கள் எதனையும் கொண்டிராது. அவை சந்திரன் இல்லாத கிரகங்கள் எனப்படும். நமது சூரியக் குடும்பத்தில் புதனுக்கும், வெள்ளிக்கும் சந்திரன்கள் ஏதும் இல்லை. நமது பூமிக்கும் புளூட்டோவிற்கும் ஒவ்வொரு சந்திரன்கள் உண்டு. செவ்வாயையும் நெப்ரியூனையும் முறையே இரண்டு சந்திரன்கள் வலம் வருகின்றன. ஏனைய கிரகங்களை இரண்டுக்கும் மேற்பட்ட, பல சந்திரன்கள் வலம் வருகின்றன. இப்படியாக சந்திரன் என்ற பதம் ஒரு பொதுவானதாக இருப்பினும் பூமிவாழ் மக்களாகிய எமக்கு பூமியின் சந்திரன் மிக அண்மையிலும், நம்மிடையே மிகமிகச் செல்வாக்குப் பெற்றிருப்பதனாலும் சந்திரன் என்றவுடன் எமக்கெல்லாம் பூமியினது சந்திரனே ஞாபகத்திற்கு வரும். மேலும் சிலருக்கு ஏனைய கிரகங்களின் சந்திரன்கள் பற்றி ஏதுமே தெரியாது. அறி[illegible]க்கமாட்டார்கள் என்பதும் பெரிய உண்மையாகும். நாமும் சென்றதடவையில் பார்த்ததுபோல் நமது பூமியின் சந்திரன் பற்றியே பார்ப்போம்.

சூரியக் குடும்பத்தில் நமது சந்திரன் அதாவது பூமியின் சந்திரன் -அம்புலி உருவத்தில், திணிவில் மிகமிகச் சிறியதாயினும் அதனது தாக்கம் பூமியில் கணிசமான அளவு பெரியதாக இருப்பதனால் சந்திரன் பற்றிய அறிவு எமக்கு ஓரளவேனும் இருப்பது நல்லது.

